**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. R.V ENTERPRISES LEASE OVER AN EXTENT OF 2.40.0 HA LOCATED AT S.F. NO: 232/2(PART), MUGALUR VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 24.07.2023 AT 10.30 AM AT M/S. CMK KALYANA MANDAPAM, NAGONDAPALLI, DENKANIKOTTAI MAIN ROAD, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. P.Krishnan | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4. | Er. T.Senthilkumar | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 5 | Thiru.M. Ramamoorthy | : | The Proponent<br>M/s. R.V Enterprises |
| 6 | Thiru.P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 143 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed

M/s. R.V Enterprises Rough Stone Quarry Lease over an Extent of 2.50.0 Ha Located at S.F.No. 232/2(Part) in Mugalur Village, Hosur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 21.06.2023 and bit notices regarding public hearing was issued to the public of Mugalur Village, Vanapalli Village, Agraharam Village, and Palayam Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Eco tech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Narayanappa, Mugalur Village:**

Thiru. Narayanappa has said that, a complaint has already been lodged with the Tamil Nadu Pollution Control Board regarding air pollution due to the dust emitted from the existing quarries also he said that permission should not be given for the new quarrying project as there is already a lot of damage due to existing quarries and he objected the proposed project as the project is 100 meters away from his Patta land.

2. **Thiru. Logesh, Mugalur Village:**

Thiru. Logesh has said that, the proposed quarry is going to be established at SF.No.232/2. Adjacent to the proposed quarry my land is located at SF.No.232/1, where I cultivate carrots and tomatoes and my cultivation will be affected due to this quarry project. Also, about 150 acres of agricultural land and cattle rearing will be affected by this project. Therefore, the permission should not be given to this project. Further, crusher operation in this village cause a lot of air pollution and the crusher units have obtained consent for single crusher unit but they are operating illegally many crushers without proper consent. In this regard, if we made complaint, we are threatened from the company end.

3. **Thiru. Appayu Reddy, Mugalur Village:**

Thiru. Appayu Reddy has said that, due to the operation of the existing crusher near his land, two bore wells have dried up and the Kuruvetti lake is also dried. Further, he said that, the blasting creates high vibration. Therefore, he said, if a new quarry is established, there will be more damage.

4. **Thiru. Veerabathrappa, Mugalur Village:**

Thiru. Veerabathrappa has said that, we have already objected to establish another quarry project ten years ago. However, no action was taken on it. He said that due to the proposed quarry project, the nearby mango farms, coriander plantations and carrot crops will be affected. no quarry project shall be located one kilometre from the residential area. But the project is proposed to

establish at just 480 meters from residential area. Also, there are about 10 houses located about 150 meters from the S.F.No. 232/2, where the people have been living for 40 years and are engaged in agriculture and cattle rearing on 10 acres of land. He said that, due to blasting in the quarries, the houses were damaged and they were now living in steel sheets and the quarry management threatened them if they complained about it. Earlier, the former Sub Collector inspected the area and found that the quarry was located 75 meters from the residential area and rejected the project. I had requested information about the proposed quarry application through the Right to Information Act, 2005 at the Tamil Nadu Pollution Control Board, Hosur office on last year 11th month and was informed that no applications regarding this quarry had been received in this office. Also, I had requested information about this again in January, and the same reply was given again, but the proposal for this project was updated through online by the SEIAA, Tamil Nadu on November itself, but I did not get the given information about it.

**The DEE, TNPCB, Hosur:**

The DEE, TNPCB, Hosur has informed that, the application for the project was received by this office only on 06.06.2023 and the proposal submitted to SEIAA, Tamil Nadu was uploaded on the website only thereafter. He said that, only after receipt of the application of proposed quarry by this office, the the public hearing process was taken up.

**Thiru. Veerabathrappa, Mugalur Village:**

Thiru. Veerabathrappa has said that, he was opposing the proposed project because it would cause more damage to the village.

**5. Thiru. V. Jayendrappa Naidu, Mugalur Village:**

Thiru. V. Jayendrappa Naidu has said that, He owns 10 acres of agricultural land near the S.F.No. 232/2. Due to the quarry activities, my four acres of land has already dried up and due to the proposed quarry project, it is likely that, up to eight acres of my land will dry up, so permission should not be given to this project.

6. **Thiru. V. Rangasamy, Mugalur Village:**

Thiru. V. Rangasamy has said that, only the people who have patta land near the quarry land are likely to be affected and they spend lakhs on cultivation. He said that, there was no objection to the public using the nearby proamboke land and they were brought to this meeting today with a payment of 200 rupees.

7. **Thiru. Rajappa, Mugalur Village:**

Thiru. Rajappa has said that, my agricultural land is located at S.F.No 232/1 which is one meter apart from quarry S.F.No. 232/2, where we are cultivating vegetables of carrot and cabbage. Few days ago, the Tahsildar inspected the area and said that he would not give permission for the project.

8. **Thiru. Nagaraj, Mugalur Village:**

Thiru. Nagaraj has said that, two quarries have already permitted and operating causing more damage to this village. He also said that, even cattle rearing would become difficult if the proposed quarry project is approved.

9. **Thiru. Harish Babu, Mugalur Village:**

Thiru. Harish Babu has said that, permission should not be given to the proposed project. He also said that, due to blasting in the quarries, nearby houses are getting cracks. He also said that we have conducted survey in this regard.

10. **Thirumathi. Aswini, Mugalur Village:**

Thirumathi. Aswini has said that, permission should not be given to the quarry project as it will cause a lot of damage.

11. **Thirumathi. Yellamma, Mugalur Village:**

Thirumathi. Yellamma has said that, due to this quarry project, the cattle rearing will be affected and due to the operation of the existing quarries; the water is polluted and unfit for drinking.

**12. Thiru. Murugesh, Mugalur Village:**

Thiru. Murugesh has said that, due to the establishment of this quarry project, there will be a lot of damage and also that due to the operation of the existing quarries, the houses have damaged. In this regard, we have lodged a complaint at the police station and pollution control board. He also said that they were threatened, if they filed such a complaint.

**13. Thirumathi. Yellamma, Mugalur Village:**

Thirumathi. Yellamma has said that, we could not able to farm due to the quarry project. Therefore, the permission should not be given to the proposed quarry project.

**14. Thirumathi. Amaravathi, Mugalur Village:**

Thirumathi. Amaravathi has said that, the sheets of their house were damaged due to blasting and it led to rainwater seepage into the house.

**15. Thirumathi. Saraswathiyammal, Mugalur Village:**

Thirumathi. Saraswathiyammal has said that, the mangoes and coconut trees in her farm have been affected by the dust emanated from the quarry.

**16. Thiru. Veerapa, Mugalur Village:**

Thiru. Veerapa has said that, he is objecting the quarry project as it is located near his agricultural land.

**17. Thiru. Govindappa, Mugalur Village:**

Thiru. Govindappa has said that, Mostly Harijans are living at government poramboke lands in this village and requested to help them.

**18. Thiru. Mathanagiriappa, Mugalur Village:**

Thiru. Mathanagiriappa has said that, permission should not be given to this project and informed that public here were brought for payment of 200 rupees.

**19. Thiru. Beemaiah, Mugalur Village:**

Thiru. Beemaiah has said that, He has been farming in this area since 1980 and said that he is opposing the proposed quarry project.

**20. Thiru. M.G. Thimma Reddy, Mugalur Village:**

Thiru. M.G. Thimma Reddy has said that, he has been fighting for the farmers since time immemorial. He also said that there are many quarries in the area and the complaints were filed against them in the office of the Collector and Pollution Control Board. He also said that, the poor and Dalit people have been living here for more than 100 years in poramboke land and quarries are already being run by local people in the area and now the quarry is being run by outsiders. Also, crusher is located in his land at S.F.No.267 and due to the crusher in his land, he is suffering a lot and the case is pending in the court. He said that, even if he boring a bore well up to 1000 feet in his land, there is no water available and he cannot do the cattle rearing. He said that he intends to hold a protest in front of the village administration office. He also requested that the nearby school students and land, water and air be affected due to the construction of proposed quarry project. He also asked that new projects should be proposed only after closing the existing quarries.

**21. Thirumathi. Rajamma, Mugalur Village:**

Thirumathi. Rajamma has said that, much daily wage poor people are living in this village. She also said that, the wall of her house damaged due to the existing quarries and informed that, the quarry management does not provide any assistance to the poor people in the area.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 33 number of petitions were received on the proposed M/s. R.V Enterprises Rough Stone Quarry project during the public hearing meeting. 'The petitions are enclosed herewith'.

Further, it is informed that, one number of written representation and 2 number of E-mail petitions were received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

08/8/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Sub Collector**
**Hosur**
5/7

**District Collector**
**Krishnagiri**
5/7

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், முகளூர் கிராமத்தில், சர்வே. எண். 232/2(பகுதி), உத்தேசிக்கப்பட்டுள்ள ஆர்.வி எண்டர்பிரைசஸ், ரப் ஸ்டோன் குவாரி 2.40.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 24.07.2023 அன்று தேன்கனிக்கோட்டை மெயின் ரோடு, நாகொண்டபள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தி/ள். CMK கல்யாண மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.T.செந்தில் குமார் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 5 | திரு.M.ராமமூர்த்தி | : | உரிமையாளர்<br>தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ் |
| 6 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 143 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ், ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். **ஆர்.வி எண்டர்பிரைசஸ்,** உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.06.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், முகளூர், வனப்பள்ளி, அக்ரஹாரம், பாளையம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி

திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. நாரயணப்பா, முகளூர் கிராமம்:**

திரு. நாரயணப்பா அவர்கள், ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகளில் இருந்து வெளியேறும் தூசுகளால் காற்று மாசு ஏற்படுவதாகவும் அதுகுறித்து ஏற்கனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அமைந்துள்ள குவாரிகளால் அதிகளவு பாதிப்புகள் இருப்பதால் மீண்டும் புதியதாக இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என்றும் இத்திட்டமானது தனது பட்டா நிலத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ள காரணத்தினால் இத்திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக கூறினார்.

**2. திரு.லோகேஷ், முகளூர் கிராமம்:**

திரு. லோகேஷ் அவர்கள், தற்போது ச.எண்.232/2–ல் குவாரி அமையவுள்ளது அதன் அருகில் ச.எண்.232/1–ல் என்னுடைய நிலம் அமைந்துள்ளது அங்கு காரட், தக்காளி ஆகியவற்றை விளைவிப்பதாக

தெரிவித்தார்.இக் குவாரி திட்டம் வருவதினால் எனது விவசாயம் பாதிப்பு அடையும் என்று கூறினார். மேலும், இத்திட்டத்தினால் சுமார் 150 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் மாந்தோப்புகள் பாதிப்பு அடையும். எனவே, இக்குவாரி திட்டத்திற்க அனுமதி அளிக்க வேண்டாமென்று தெரிவித்தார். மேலும், இவ்வூரில் கிரஷர்களால் அதிகளவு காற்று மாசு ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு கிரஷர் நிறுவனத்திற்கு அனுமதி வாங்கிவிட்டு, பல கிரஷர் நிறுவனங்கள் சட்ட விரோதமாக இயங்கி வருகின்றன எனவும் இது குறித்து புகார் அளித்தால் மிரட்டல் தெரிவிப்பதாக கூறினார்.

**3, அப்பாயு ரெட்டி, முகளூர்**

திரு. அப்பாயு ரெட்டி அவர்கள் தனது நிலத்தின் அருகே கிரஷர் அமைந்துள்ள காரணத்தினால் இரண்டு ஆழ் துளை கிணறுகள் நீரின்றி வரண்டு விட்டதாக தெரிவித்தார். மேலும், அருகிலுள்ள குருவெட்டி ஏரியில் நீர் வறண்டு காணப்படுவதாக கூறினார். மேலும், வெடிவைப்பதன் காரணமாக அதிகளவு நில அதிர்வுகள் எற்படுவதாக கூறினார். எனவே, புதியதாக குவாரி அமைத்தால் அதிகளவு பாதிப்பு ஏற்படும் என்று கூறினார்.

**4, வீரபத்ரப்பா, முகளூர் கிராமம்**

திரு. வீரபத்ரப்பா அவர்கள், பத்து வருடங்களுக்கு முன்னதாக ஓர் குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாதென்று ஆட்சேபனை தெரிவித்தோம். ஆனால், அதன்மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இக்குவாரி திட்டத்தினால் அருகிலுள்ள மாந்தோட்டங்கள், கொத்தமல்லி தோட்டம், கேரட் விளைச்சல் ஆகியவை பாதிப்படையும் என்று கூறினார். குவாரி திட்டம் அமைவதற்கு அருகில் ஒரு கி.மீ. சுற்றளவில் எவ்வித குடியிருப்பும் அமைந்திருக்க கூடாது. ஆனால் இத்திட்டமானது வெறும் 480 மீட்டர் அருகில் அமையவுள்ளது. மேலும், 232/2 புல எண்ணிற்கு அருகில் 150 மீட்டர் அருகில் சுமார் 10 வீடுகள் அமைந்துள்ளன, அங்கு 40 வருடங்களாக அவர்கள் வசித்து வருகின்றனர் மேலும்

10 ஏக்கர் நிலத்தில் விவசாயமும் ஆடு மேய்த்தல் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர். குவாரிகளில் வெடி வைத்த காரணத்தினால் வீடுகள் இடிந்து தற்பொழுது இரும்பு தகரத்தினலான குடியிருப்பில் வாழ்ந்து வருவதாக கூறினார் மேலும் இது குறித்து புகார் அளித்தால் குவாரி நிர்வாகத்தினர் மிரட்டுவதாக கூறினார். ஏற்கனவே, முன்னாள் சார் ஆட்சியர் அவர்கள் இப்பகுதியை ஆய்வு செய்து இக்குவாரியானது 75 மீட்டர் குடியிருப்பு பகுதிக்கு அருகில் உள்ளதாக கண்டறிந்து அத்திட்டத்தை நிராகரித்தார். தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரிய ஓசூர் அலுவலகத்தில் தான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் இந்நிறுவனத்தின் விண்ணப்பம் குறித்து கடந்த 11 – வது மாதம் தகவல் கோரியிருந்தேன் அப்பொழுது இக்குவாரி குறித்தான விண்ணப்பங்கள் ஏதும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை என்று தகவல் அளிக்கப்பட்டிருந்தது. மேலும், ஜனவரி மாதத்தில் மீண்டும் இதுகுறித்து தகவல் கோரியிருந்தேன் அதற்கு அதே பதில் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது ஆனால் SEIAA குழுமத்தில் நவம்பர் மாதமே இத்திட்டத்திற்கான முன்மொழிவு விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது ஆனால் இதுகுறித்த தகவல் எனக்கு வழங்கப்படவில்லை என்று கூறினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் :**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள் இத்திட்டத்திற்கான விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் 06.06.2023 அன்றுதான் பெறப்பட்டது என்றும் SEIAA நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவானது அதற்கு பின்னரே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். இக்குவாரியின் விண்ணப்பம் இவ்வலுவலத்தில் பெறப்பட்ட பிறகுதான் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கூறினார்

**வீரபத்ரப்பா, முகளூர் கிராமம்**

வீரபத்ரப்பா, முகளூர் கிராமம் அவர்கள் இக்குவாரி திட்டத்தினால் அதிகளவு பாதிப்பு ஏற்படும் எனும் காரணத்தினால் இத்திட்டத்திற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார்.

**5. திரு. V. ஜெயத்திரப்பா நாயுடு, முகளூர் கிராமம்:**

திரு. V. ஜெயத்திரப்பா நாயுடு, அவர்கள் 232/2 புல எண்ணிற்கு அருகே தனக்கு 10 ஏக்கர் விவசாய நிலம் அமைந்துள்ளது. குவாரிகளின் செயல்பட்டினால் ஏற்கனவே எனது நான்கு ஏக்கர் நிலம் காய்ந்து விட்டது எனவும், இக்குவாரி திட்டம் வருவதினால் எனது எட்டு ஏக்கர் நிலம் வரையில் காய்ந்து போக வாய்ப்புள்ளது எனவே, இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என்று கூறினார்.

**6. திரு. ரங்கசாமி, முகளூர் கிராமம்:**

திரு. ரங்கசாமி அவர்கள் இக்குவாரி நிலத்திற்கு அருகில் பட்டா நிலம் உள்ள மக்கள் மட்டுமே பாதிப்பு அடைய வாய்ப்புள்ளதாகவும், அவர்கள் இலட்சக்கணக்கில் செலவு செய்து விவசாயம் செய்வதாக தெரிவித்தார். அருகிலுள்ள புறம்போக்கு நிலத்தை பயன்படுத்தும் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென்றும், தாங்கள் இன்று 200 ரூபாய் கொடுக்கப்பட்டு இக்கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**7. திரு. ராஜப்பா, முகளூர் கிராமம்:**

திரு. ராஜப்பா, அவர்கள், இக்குவாரி அமைந்துள்ள புல எண். 232/2 – ற்கு அருகில் 232/1 புல எண்ணில் எனது விவசாய நிலம் ஒரு மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ளது அங்கு தாங்கள் கேரட், முட்டைகோஸ் போன்ற காய்கறிகளை விளைவித்து வருவதாக தெரிவித்தார். சிறிது நாட்களுக்கு முன்பாக தாசில்தார் இப்பகுதிக்கு வருகை புரிந்து விசாரணை மேற்கொண்டார் பிறகு இத்திட்டத்திற்கு

அனுமதி வழங்க மாட்டொமென்று கூறினார். தற்போழுது உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்க கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். மேலும், இக்குவாரி திட்டம் வருவதினால் அருகிலுள்ள ஏரி வறண்டு நீர் பற்றாக்குறை எற்படும் என்று கூறினார்.

**8. திரு. நாகராஜ், முகளூர் கிராமம்:**

திரு. நாகராஜ் அவர்கள், ஏற்கனவே இரண்டு குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு இயங்கி வருகிறது அவற்றால் அதிகளவு பாதிப்பு உள்ளது. மேலும், இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் மாடு மேய்த்தல் கூட கடினமாகி விடும் என்று கூறினார்.

**9. திரு. ஹரிஷ் பாபு, முகளூர் கிராமம்:**

திரு. ஹரிஷ் பாபு அவர்கள், இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என்று கூறினார். மேலும், குவாரிகளில் வெடி வைப்பதன் காரணமாக அருகிலுள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுவதாக கூறினார். மேலும், இது குறித்து நாங்கள் அளவீடு மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

**10. திருமதி. அஸ்வினி, முகளூர் கிராமம்:**

திருமதி. அஸ்வினி அவர்கள் இக்குவாரி அமைவதினால் அதிக அளவு பாதிப்பு ஏற்படுவதால் இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என்று கூறினார்.

**11. திருமதி. எல்லம்மா, முகளூர் கிராமம்:**

திருமதி. எல்லம்மா அவர்கள் இக்குவாரி வருவதினால் மாடு மேய்த்தல் தொழிலானது பாதிக்கப்படும் என்றும் தற்போதுள்ள குவாரிகளின் செயல்பாட்டின் காரணமாக தண்ணீர் மாசடைந்து குடிக்க இயலாத நிலையில் உள்ளது என்று கூறினார்.

**12. திரு. முருகேஷ், முகளூர் கிராமம்:**

திரு. முருகேஷ் அவர்கள், இக்குவாரி திட்டம் அமைவதால் அதிகளவு பாதிப்புகள் ஏற்படும் என்று தெரிவித்தார் மேலும், ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகளின் செயல்பட்டால் வீடுகள் இடிந்து விட்டதாகவும், இதுகுறித்து சார் ஆட்சியர், ஓசூர். காவல் நிலையம், மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகிய இடங்களில் புகார் அளித்துள்ளோம். மேலும், இவ்வாறு புகார் அளித்தால் தங்களுக்கு மிரட்டல் விடப்பட்டதாக தெரிவித்தார்.

**13. திருமதி. எல்லம்மா, முகளூர் கிராமம்:**

திருமதி. எல்லம்மா அவர்கள், எங்களால் விவசாயம் செய்ய இயலவில்லை. எனவே, குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று கூறினார்.

**14. திருமதி. அமராவதி, முகளூர் கிராமம்:**

திருமதி. அமராவதி அவர்கள், தங்களுடைய வீட்டின் தகரங்கள் வெடிவைத்ததன் காரணமாக உடைந்து விட்டதாகவும், அதன் காரணமாக மழைநீர் வீட்டுக்குள் வருவதாகவும் தெரிவித்தார்.

**15. திருமதி. சரஸ்வதியம்மாள், முகளூர் கிராமம்:**

திருமதி. சரஸ்வதியம்மாள் அவர்கள் தங்களது தோட்டத்தில் உள்ள மாமரங்கள், தென்னை மரங்கள் ஆகியவை குவாரியிலிருந்து வரும் தூசிகளினால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார்.

**16. திரு. வீரப்பா, முகளூர் கிராமம்:**

திரு. வீரப்பா அவர்கள் அமையவுள்ள இக்குவாரியனாது தன்னுடைய விவசாய நிலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளதால் இக்குவாரி திட்டத்தை தான் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

**17. திரு. கோவிந்தப்பா, முகளூர் கிராமம்:**

திரு. கோவிந்தப்பா அவர்கள் இவ்வூரில் ஹரிஜன மக்கள் அதிகமாக அரசாங்க புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர்களுக்கு உதவிசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**18. திரு. மதனகிரியப்பா, முகளூர் கிராமம்:**

திரு. மதனகிரியப்பா அவர்கள், இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று கூறினார் மேலும், இங்கு 200 ரூபாய் கூலிக்கு பொதுமக்களை அழைத்து வந்து கூட்டம் நடத்துவதாக தெரிவித்தார்.

**19. திரு. பீமய்யா, முகளூர் கிராமம்:**

திரு. பீமய்யா அவர்கள், 1980 – ம் ஆண்டிலிருந்து இப்பகுதியில் விவசாயம் செய்து வருவதாகவும், இக்குவாரி திட்டத்திற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார்.

**20. திரு. M.G. திம்மா ரெட்டி, முகளூர் கிராமம்:**

திரு. M.G. திம்மா ரெட்டி அவர்கள், தான் காலம்காலமாக விவசாய மக்களுக்காக போராடி வருவதாக தெரிவித்தார். மேலும், இப்பகுதியில் பல கல்குவாரிகள் உள்ளதாகவும், அவற்றின் மீது பல புகார் மனுக்கள் சார் ஆட்சியர் மற்றும் மாசு கட்டுபாடு வாரிய அலுவலகத்தில் அளித்து உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், இங்கு 100 வருடங்களுக்கு மேலாக புறம்போக்கு நிலத்தில் ஏழை மற்றும் தலித் மக்கள் வாழ்ந்து வருவதாகவும், அப்பகுதியில் ஏற்கனவே உள்ளூர் நபர்களால் இருகுவாரிகள் நடத்தப்பட்டு வருவதாகவும், தற்போது வெளியூர்காரர்களால் குவாரி நடத்தப்படவதாகவும் தெரிவித்தார். மேலும், தனது நிலமானது ச.எண். 267 – லில் அமைந்துள்ளது. அப்பகுதியில் கிரஷர் அமைந்துள்ள காரணத்தினால் எனக்கு பெரும்பாதிப்பு ஏற்படுவதாகவும் அதுகுறித்தான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதாக கூறினார் தனது நிலத்தில் 1000

அடி வரையில் ஆழ்துளை கிணறு தோண்டியும் நீர் கிடைப்பதில்லை மற்றும் மாடு மேய்க்க முடிவதில்லை. இது குறித்து கிராம நிர்வாக அலுவலத்தின் முன்பு போராட்டாம் நடத்த உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார். மேலும், இக்குவாரி திட்டம் அமைவதால் அருகிலுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் நிலம், நீர் மற்றும் காற்று ஆகியவை பாதிப்படையும் என்றும் அதனால் இவற்றை பாதுகாக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், ஏற்கனவே இயங்கி வரும் குவாரிகளை மூடிய பின்பே, புதிய திட்டங்களை உத்தேசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**21. திருமதி. ராஜம்மா, முகளூர் கிராமம்:**

திருமதி. ராஜம்மா அவர்கள், இவ்வூரில் அதிகளவில் கூலி வேலை செய்யும் ஏழை மக்களே வசித்து வருகின்றனர் என்று கூறினார். மேலும், ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகள் செயல்பாட்டால் தனது வீட்டில் சுவர் இடிந்து விழுந்து பாதிப்படைந்தது என்று தெரிவித்தார். மேலும், இப்பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு குவாரி நிர்வாகத்தினர் எவ்வித உதவியும் செய்வதில்லை என்று கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 33 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். ஆர்.வி எண்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக ஒரு மனுவும், மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் 2 மனுக்களும் பெறப்பட்டது அவை இத்துடன் இணைத்தனுப்படுகிறது

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

06/8/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**
4/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**
4/7